**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - 2022-2023 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காயரம்பேடு திட்டப்பகுதி, தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலம் 64 பழங்குடியினர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒரு பயனாளியின் பங்குத் தொகை ரூ.2,40,000/- வீதம் 64 பயானாளிகளின் பங்குத் தொகை ரூ.1,53,60,000/- – நிதி ஒப்பளிப்பு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் ப.மே1(2)] துறை**

**அரசாணை (ப) எண். 123**

**நாள் 14.06.2022**
வைகாசி மாதம் 31-ஆம் நாள்,
சுபகிருது வருடம்,
திருவள்ளுவர் ஆண்டு 2053
**படிக்கப்பட்டது :-**

1. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கடித எண். 900/அ1/கா.கோ/2020, நாள் 09.07.2021
2. மாவட்ட ஆட்சி தலைவர், செங்கல்பட்டு கடித எண். 1153/2021/ஜே2, நாள் 10.07.2021.
3. இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண்.பமே/அ3/8122/2021, நாள் 22.07.2021 மற்றும் 16.02.2022.

*******

**ஆணை :-**

மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காயரம்பேடு கிராமத்தில் சர்வே எண்.413/1-ல் 0.16.00 ஹெக்டேர் நிலத்தில் தீ விபத்தால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு இதன் தொடர்ச்சியாக 64 குடியிருப்புகள் PMAY-HFA திட்டத்தின்கீழ் கட்ட ஒப்புதல் பெறப்பட்டு கட்டப்பட்டு வருகிறது, மேற்படி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளில் ஏற்கனவே தீ விபத்தால் வீடுகளை இழந்த 15 இருளர் குடும்பங்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள 49 குடியிருப்புகள் வீட்டுமனை மற்றும் வீடுகள் இல்லாத இருளர் இன மக்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யலாம் என்றும், மேற்படி (15+49 = 64) 64 குடியிருப்புகளுக்கு பயனாளிகளின் பங்குத் தொகையாக ஒவ்வொரு பயனாளியும் ரூ.2,50,000/- தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும் எனவும் மேலும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் 64 குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்ட மதிப்பீடு விவரம் பின்வருமாறு:-

| மேற்படி திட்டத்தின் மொத்த மதிப்பீடு தொகை- ரூ.704.00 இலட்சம் | |
|---|---|
| மத்திய அரசின் பங்களிப்பு தொகை | ரூ.96.00 இலட்சம் |
| மாநில அரசின் பங்களிப்பு | ரூ.448.00 இலட்சம் |
| பயனாளிகளின் பங்களிப்பு தொகை | ரூ.160.00 இலட்சம் |

மேலும், அழிவின் விளிம்பில் உள்ள இருளர் இன மக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட்டு வரும் வீடுகளுக்கு பயனாளிகளின் பங்குத் தொகையான ரூ.2,50,000/-னை வறுமையில் உள்ள இருளர் மக்களால் செலுத்த இயலாத நிலை உள்ளதால் 64 இருளர் பயனாளிகள் குடும்பங்களுக்கான பங்குத் தொகையான ஒரு பயனாளிக்கு ரூ.2,50,000/- வீதம் 64 பயனாளிகளுக்கு இருளர் இன மக்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் (64X2,50,000= 1,60,00,000/-) ரூ.1,60,00,000/- தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்கிட ஏதுவாக நிதி ஒதுக்கீடு வழங்க செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் கோரியதின்பேரில், பயனாளிகளின் சார்பாக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு பயனாளிகளின் பங்குத் தொகை வழங்க அரசாணை வழங்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்காணும் பழங்குடியின நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்ததன் அடிப்படையில், செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காயரம்பேடு கிராமத்தில் வசிக்கும் அழிவின் விளிம்பில் உள்ள இருளர் இன மக்களுக்கு, தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலம் 64 குடியிருப்புகள் PMAY-HFA திட்டத்தின்கீழ் கட்ட ஒப்புதல் பெறப்பட்டு கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளுக்கு ஒரு பயனாளியின் மொத்த பங்குத் தொகையான ரூ.2,50,000/- இல் ஒரு சிறிய தொகை தலா ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) பயனாளிகளால் ஏற்கப்படும். மீதத்தொகை ரூ.2,40,000/-வீதம் 64 பயானாளிகளின் பங்குத் தொகை ரூ.1,53,60,000/-னை (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தி மூன்று இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) 2022-2023-ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 02 பழங்குடியினர் நலன் - 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - மாநிலச் செலவினங்கள் JY விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் - 309 உதவித் தொகை - 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை."**
**(த.தொ.கு. 2225 02 796 JY 30901)"**

4. மேலே பத்தி 2-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் மூலமாக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்க இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5 அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

5. மேலே பத்தி 2-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடமிருந்து பெற்று அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியின நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 26744/ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்/2022, நாள் 10.06.2022-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம்,
சென்னை – 600 005.
மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு மாவட்டம்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
செங்கல்பட்டு மாவட்டம்.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்,
காஞ்சிபுரம் – 631 502.
மாநிலக்கணக்காய்வுத் தலைவர், சென்னை – 600 018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 600 008.
நகல்
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
முதன்மை செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை - 600 009.
நிதி [ஆதி(ம)பந]துறை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்
(ஆதிந 5/கமபா/அநமு) துறை, சென்னை - 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
தலைமைச் செயலகம், சென்னை—600 009